நூல் விலையில் மாற்றமில்லை

திருப்பூர், ஜூலை 1: திருப்பூரில் நடப்பு மாதத்துக்கான நூல் விலையில் எந்தவித மாற்றமுமின்றி கடந்த மாத விலையே தொடரும் என நூற்பாலைகள் அறிவித்துள்ளன.

தமிழகத்தின் மேற்கு மண்டலமான கோவை , ஈரோடு , திருப்பூர் , கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஜவுளி, ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பிரதான தொழிலாக இருந்து வருகிறது. திருப்பூரில் மட்டும் ஏற்றுமதி சார்ந்த பின்னலாடை உற்பத்தி நிறுவனங்கள் பல்லாயிரக்கணக்கில் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆயத்த ஆடைகளில் சுமார் 68 சதவீதத்துக்கும்மேல் திருப்பூரில் நடைபெற்று வருகிறது. ஆயத்த ஆடை உற்பத்தியில் முக்கிய பங்காற்றுவது துணி நூல் ஆகும். பருத்தி விலையை பொறுத்து நூல் நிலையில் அவ்வப்போது மாற்றங்கள் இருக்கும். இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து மே 16-ஆம் தேதி வரை சுமார் 61 ரூபாய் வரை நூல் விலை உயர்த்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மத்திய அரசு பருத்தி இறக்குமதிக்கான 11 சதவீத வரி விதிப்பை ரத்து செய்து உத்தரவிட்டது. இதன் காரணமாக ஜூன் 1 மற்றும் 15-ஆம் தேதிகளில் 10 ரூபாய் குறைக்கப்பட்டது. இருப்பினும் கடந்த 23-ஆம் தேதி 5 ரூபாய் விலை உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் நடப்பு மாதத்துக்கான (ஜூலை) நூல் விலையை நூற்பாலைகள் அறிவித்துள்ளது. இதில் விலை உயர்வு இன்றி கடந்த மாதம் நிர்ணயத்தை விலையே தொடரும் என அறிவித்துள்ளது.

இதன்படி நடப்பு மாதத்துக்கான நூல் விலைஃ

10ஆம் நம்பர் கோம்டு நூல் கிலோ ரூ.229, 16ஆம் நம்பர் ரூ.239, 20ஆம் நம்பர் கோம்டு நூல் ரூ.297, 24ஆம் நம்பர் ரூ.309, 30ஆம் நம்பர் ரூ.319, 34ஆம் நம்பர் ரூ.339, 40ஆம் நம்பர் ரூ.357, 20ஆம் நம்பர் செமி கோம்டு ரூ.294, 24ஆம் நம்பர் ரூ.302, 30ஆம் நம்பர் ரூ.305, 34ஆம் நம்பர் ரூ. 328, 40ஆம் நம்பர் ரூ.347 என விற்பனை செய்யப்படுகிறது.

உடுமலையில் மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல்

மறியல் போராட்டத்தில் பங்கேற்றோர்.

உடுமலை, ஜூலை 1: மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலைத் திட்டத்தையே தொடர்ந்து அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உடுமலையில் மாற்றுத்திறனாளிகள் புதன்கிழமை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைக்கான சங்கம் சார்பில் உடுமலை மத்திய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு ஏ.மாலினி தலைமை தாங்கினார்.

மகாத்மா காந்தி பெயரிலான 100 நாள் வேலைத்திட்டத்தையே தொடர்ந்து அமல்படுத்த வேண்டும். திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை ரூ.4 லட்சம் கோடியாக உயர்த்தி வழங்க வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை நாளை 200 ஆகவும், சம்பளத்தை ரூ.700 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். விண்ணப்பித்த மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உடனடியாக உதவித்தொகையை வழங்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை ரூ.3000, கடும் ஊனமுற்றவர்களுக்கு ரூ.6000 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது.

இதில், கமிட்டி உறுப்பினர்கள் குருசாமி, முத்துக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வீட்டிலேயே பிரசவம் பார்த்த புகார்: மாவட்ட ஆட்சியர் விளக்கம்

திருப்பூர், ஜூலை 1: திருப்பூரில் வீட்டிலேயே சுய பிரசவம் பார்த்த சம்பவத்தில் இளம்பெண் உயிரிழந்தது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மனீஷ் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் வட்டம், பி.தளவாய்பாளையம் கிராமத்தில் வசித்து வந்த சசிகலா என்பவருக்கு கடந்த 24-ஆம் தேதி அதிகாலை 5.40 மணியளவில் கணவர் மற்றும் உறவினரால் பிரசவம் பார்க்கப்பட்டது. பெண் குழந்தை பெற்றதைத் தொடர்ந்து நஞ்சுக்கொடி வெளி வராததால் சசிகலாவுக்கு தீவிர உதிரப்போக்கு ஏற்பட்டதால் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு அவசர சிகிச்சை அளித்து பின்னர் பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு சிகிச்சை பெற்ற நிலையில் 25-ஆம் தேதி இரவு 10.30 மணிக்கு சசிகலாவின் உடல்நிலை மிகவும் மோசமானதை அடுத்து, கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அவர்களது உறவினர்களின் விருப்பப்படி பரிந்துரை செய்துள்ளனர்.

தொடர்ந்து கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சசிகலா 28-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் இறந்துள்ளார். சசிகலா ஏற்கெனவே கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்னர் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின் மூலம் பெண் குழந்தை பெற்றெடுத்துள்ளார்.

இதற்கிடையில் மீண்டும் சசிகலா கருவுற்றுள்ளார். ஆனால் அவரது கர்ப்பத்தை மறைத்துள்ளனர். மருத்துவமனையில் எந்த விதமான கர்ப்ப கால சிகிச்சைகளும் எடுத்துக் கொள்ளவில்லை. மருத்துவமனை சேவைகளை பயன்படுத்தாமல், இயற்கை வழியில் வீட்டிலேயே பிரசவம் பார்க்க எண்ணி இருந்ததால் கர்ப்பத்தைப் பற்றி யாரிடமும் கூறவில்லை.

இது தொடர்பாக தகவல் அறிக்கை மூலம் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

மாந்தபுரம் அருகே குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்

குழாய் உடைந்து சாலையில் வழிந்தோடும் குடிநீர்.

வெள்ளக்கோவில், ஜூலை 1: வெள்ளக்கோவில் - முத்தூர் சாலையில் உள்ள மாந்தபுரம் அருகே குழாய் உடைந்து ஏராளமான குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது.

வெள்ளக்கோவில் நகராட்சி, ஊராட்சிப் பகுதி மற்றும் வழியோரப் பகுதிகளுக்கு கொடுமுடி காவிரி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாந்தபுரம் அருகில் குடிநீர்த் திட்ட பிரதானக் குழாய் உடைந்து கடந்த சில நாள்களாக ஏராளமான குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது. இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், 'தற்போது பல இடங்களில் போதுமான குடிநீர் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, குழாய் உடைப்பை உடனடியாகச் சரிசெய்ய வேண்டும்' என்றனர்.

விழிப்புணர்வுப் பேரணி....

அவிநாசி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி சார்பில் புதன்கிழமை நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்ற மாணவிகள்.

அவிநாசியில் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்கக் கோரிக்கை

அவிநாசி, ஜூலை 1: அவிநாசியில் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏஐடியூசி சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து திருப்பூர் மாவட்ட ஜெனரல் ஓர்க்கர்ஸ் யூனியன்(ஏஐடியூசி), அவிநாசி நகர சாலையோர வியாபாரிகள் சங்கத்தினர் சார்பில் அவிநாசி நகராட்சி நிர்வாகத்திடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:அவிநாசி நகரில் புதிய பேருந்து நிலையம் முதல் சேவூர் சாலை வரை பொதுமக்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் இடையூறு இல்லாமல், மத்திய அரசின் சட்டத்துக்கு உள்பட்டு சாலையோர வியாபாரிகள் கடந்த பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வருகின்றனர்.

எனவே, அனைத்து தெருவோர வியாபாரிகளுக்கும் அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்றிதழ் வழங்க வேண்டும். தெருவோர வியாபாரிகளின் சங்க நிர்வாகிகளுடன் பேசி புதிய குழு அமைத்து பொருத்தமான மண்டலங்களை அறிவித்து தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளனர். இதில், ஏஐடியூசி ஜெனரல் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் ஜி.ரவி, அவிநாசி தெருவோர வியாபாரிகள் சங்க செயலாளர் ஏ.ஜி.சண்முகம், தலைவர் நாசர் அலி, மாவட்ட பொருளாளர் செல்வராஜ், ஒன்றியக் குழு உறுப்பினர் கோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: இளைஞர் கைது

அவிநாசி, ஜூலை 1: சேவூர் அருகே பந்தம்பாளையத்தில் 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த இளைஞரை போலீஸார் போக்ஸோ சட்டத்தில் புதன்கிழமை கைது செய்தனர்.

சேவூர், பந்தம்பாளையம் பகுதியில் வசித்து வருபவர் நவநீஷ் (20). கல்லூரி மாணவர். இவர் அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது குறித்து சிறுமி தனது பெற்றோரிடம் கூறியுள்ளார். இதைடுத்து பெற்றோர் அளித்த புகாரின்பேரில், அவிநாசி அனைத்து மகளிர் போலீஸார் போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து நவநீஷை கைது செய்தனர்.

குழந்தைகளுக்கு பல் பரிசோதனை முகாம்

முகாமில் பங்கேற்ற ரோட்டரி சங்கத் தலைவர் கே.ஆர். சின்னசாமி உள்ளிட்டோர்.

வெள்ளக்கோவில், ஜூலை 1: வெள்ளக்கோவில் உப்புப்பாளையம் சாலை சத்யம் மாண்டிசோரி பள்ளியில் குழந்தைகளுக்கு இலவச பல் பரிசோதனை முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

வெள்ளக்கோவில் ரோட்டரி சங்கம், சத்யம் பள்ளி நிர்வாகம் இணைந்து நடத்திய இம்முகாமினை சங்கத் தலைவர் கே.ஆர். சின்னசாமி தொடங்கிவைத்தார். சங்க துணை நிலை ஆளுநர் ரகுநாதன், துணைத் தலைவர் பிரபு, முன்னாள் தலைவர் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் 85 குழந்தைகளுக்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்து, தகுந்த ஆலோசனை, பல் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து எடுத்துக் கூறினர். ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சாமிநாதன், சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பஞ்சாப் நேஷனல் பேங்க் / பஞ்சாப் நேஷனல் வங்கி
...the name you can BANK upon !
SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 14. தொலைபேசி: 044-28112261-90 மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் **கடன்தாரர்(கள்)** மற்றும் **அடமானதாரர்(கள்)**க்கு குறிப்பாகவும் கடன் வழங்கிய பஞ்சாப் நேஷனல் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரியானவர், **கீழே குறிப்பிட்ட பெயர்களில் உள்ள கடன்தாரர்(கள்)** மற்றும் **அடமானதாரர்(கள்)** ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வர்து சேரவேண்டிய கீழ் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஆக்கப்பூர்வ கவாதினத்தில் எடுத்துக்கொண்டு, அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்து(க்களை), "உள்ளது உள்ளவாறு" "உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் **17.07.2026** அன்று விற்கப்பட உள்ளன.

கடன்தாரர் / அடமானதாரர்/பேம்படுத்துநர்:

1) **M/s. RBR Garments Private Limited**, எண்.177/3-A1, பச்சாங்காட்டுப்பாளையம், காரைபுதூர் கிராமம், அரன்புரம் அஞ்சல், திருப்பூர்.
2) **திரு. B. சண்முகசுந்தரம்**, 1/556, TPN காம்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604.
3) **திருமதி. S. வைஷ்ணவி மீனா**, 1/556, TPN காம்டன், K. செட்டிப்பாளையம், தாராபுரம் சாலை, திருப்பூர் – 641 604

அடமானத்தில் உள்ள சொத்தின் விவரங்கள்

பிணையச் சொத்தின் விவரங்கள்: M/s. RBR Garments Pvt Ltd இன் பெயரில் உள்ள சொத்து: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரைபுதூர் கிராம உராட்சி வரம்பத்தின் எல்லைகளுக்குட்பட்ட, அருள்புரம் அஞ்சல், காரைப்புதூர் கிராமம் சர்வே எண்.177/3A1, 178/3, 179/3B1C, 179/3B1B இல் அடங்கிய M. P. மில் தோட்டம், கதவு எண்.7/67A, 7/67A1, 7/67B, 7/67C ஆகியவைகளில் அமைந்துள்ள நிலம் & கட்டிடம் **வகை எண்.I:** G. சர்வே எண்.177/3A1 இன் நிலங்கள் பரப்பளவு 4.96ஏக்கர்கள் @ ரூ. 4.01 அதில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.177/3A2 நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான, G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், G. சர்வே எண்.177/3B இன் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலம். **வகை எண்.II :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/2A இன் கிழக்கு மேற்கக வாகனப் பாதை மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலம். **வகை எண்.III :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.178/3, இன் பரப்பளவு 0.04ஏக்கர்கள் முக்கோண வடிவங்கொண்ட நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1B இன் பரப்பளவு 1.44ஏக்கர்கள் நிலங்கள், G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் G. சர்வே எண்.179/3A & 179/2 இன் உள்ள கிழக்கு மேற்கக கால்வாய்க்கு கிழக்கில், G. சர்வே எண்.178 பகுதி இன் நிலங்களுக்கு தெற்கில். ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலம். **வகை எண்.IV :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்கக கால்வாய்க்கு வடக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G.சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவற்றிற்கு இடையில் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.V :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: G. சர்வே எண்.179/3B2 இன் கிழக்கு மேற்கக கால்வாய்க்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 2.06 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Pvt Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3B1C இன் பரப்பளவு 1.26½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VI :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 1.26 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலங்களுக்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 3.56ஏக்கர்கள் நிலங்களுக்கு மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்:M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.17 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.15 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B பகுதியின் நிலத்திற்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில். ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 0.07 ½ ஏக்கர்கள் நிலம். **வகை எண்.VIII :** மேலும் அதே கிராமத்தின் G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம், பின்வருமாறு எல்லைகள்: M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1C இன் பரப்பளவு 0.47 ½ ஏக்கர்கள் நிலங்களுக்கு வடக்கில், M/s. Green Textile Process-ற்கு சொந்தமான G. சர்வே எண்.179/3B1B இன் பரப்பளவு 4.29 ஏக்கர்கள் நிலங்களுக்கு கிழக்கில், G. சர்வே எண். 179/3A & 179/2 இன் கிழக்கு மேற்கக கால்வாய்க்கு தெற்கில், M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.177/3A1 இன் பரப்பளவு 1.40 ஏக்கர்கள் நிலங்கள் மற்றும் M/s. RBR Garments Private Ltd-ற்கு சொந்தமான G. சர்வே எண்.178/3 இன் பரப்பளவு 0.04 ஏக்கர்கள் நிலங்களுக்கு மேற்கில், ஆகியவைகளுக்கு இடையில் பரப்பளவு 1.44 ஏக்கர்கள் நிலம். ஆவண எண்.744/2002, 758/2002,1763/2002, 5474/2003 & 219/7/2004 இல் குறிப்பிட்டபடி **வகை எண்.I முதல் வகை எண்.VIII வரை** உள்ள மொத்தப் பரப்பளவு 8.43 ஏக்கர்கள் நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள ஆஃப் வடிவமைப்பு கொண்ட கட்டிடம், சன்னல்கள், கதவுகள் போன்ற பிற கதவு எண்கள்.7/67A, 7/67A1, 7/67B & 7/67C, சொத்து வரி மதிப்பீட்டு எண்.2033, 7736, 2034 & 2035, அதன் E. B. இணைப்பு எண். 03-213-001-19/2, 03-213-001-2100 & 03-213-001-1105 அதனுடன் ஒயரிங்குகள், லைட்டுகிகள் போன்ற பிற மற்றும் அதனுடன் வழக்கமான நடைவழி மற்றும் எரிய உரிமைகள் போன்ற பிற உட்பட மற்றும் சொத்திற்கு செல்லும் இதர வழக்கமான சாலைகள் மற்றும் வாகனப்பாதைகள் உபயோக உரிமைகள் உட்பட.

குறைந்தபட்ச கேப்பு விலை: ரூ. 26,28,05,000/- டேவணித் தொகை: ரூ. 2,62,80,500/-

வங்கிக்கு தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை.

13(2) SARFAESI சட்டம் 2002ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி: 25-03-2024	
13(4) SARFAESI சட்டம் 2002ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி: 29-06-2024 (திருப்பூர் நுகரைமை நீதித்துறை நடுவரிடமிருந்து சொத்தை நேரில் கையகப்படுத்துவதற்கான உத்தரவை வங்கி பெற்றுள்ளது)	
EMD செலுத்த கடைசி தேதி	16.07.2026 அன்று மாலை 5.00 வரை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல்	10.07.2026
மின் ஏல தேதி மற்றும் நேரம்	17.07.2026 நேரம்: காலை 11 முதல் மாலை 4 மணி வரை

ஏல உயர்வு (ஏலத்தை உயர்த்திக் கோருவதற்கான குறைந்தபட்ச தொகை): ரூ.5,00,000.00

தொடர்புக்கு: திரு. VNS சந்திரசேகர் அச்சல்லா, முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 8328235168

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 31.05.2026 அன்றுள்ளபடி ரூ.52,26,73,697.30/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு கோடியே இருபது இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஏழு மற்றும் பைசா முப்பது மட்டும்)

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ம் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த நலவுரைக்குக் கருப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் 17.07.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://baanknet.com என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com & www.pnbindia.in ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 01.07.2026 முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன் வசூல் நிர்வாகக் கிளை - எண்.11/952, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயமுத்தூர் - 641 012. போன் :0422 - 2497178 இ-மெயில் : iob1551@iob.bank.in

அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

(பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) நிபந்தனையின் கீழ்)

கடனீட்டு சொத்துக்கள் ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், வங்கிக்குப் பிணையப்பட்ட அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்தானது, **இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின்** (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கபூர்வ கவாதீனம்** செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள **கடன்தாரர் : திரு. K.M பன்னீர்செல்வம் மற்றும் திருமதி. P.ராஜாமணி (LAP Account No: 002503453000003)** எண்.9/6, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001 மற்றும் **திரு. M.P.மோகனசுந்தர், திரு. K.M.பன்னீர்செல்வம் மற்றும் திருமதி.P.ராஜாமணி, (LAP:002503453000004)**, எண்.9/6, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001 மற்றும் **உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள் : 1.திரு. M.P. சக்திவேல்,** த/பெ.திரு. K.M. பன்னீர்செல்வ